# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.சா.எண். 29/2012

2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 21ம் நாள் திங்கள்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1 சுந்தர குமார்

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) கூட்டுறவு சங்கத்தில் அடமானம் போட்ட கட்டிடடத்தின் முதல் தளத்தின் மேற்குப்பகுதியில் எனது தந்தை கட்டிடம் கட்டி முடித்துவிட்டார். நான் எனது மனைவி குழந்தைகளுடன் 1998 ம் வருடம் முதல் தளத்திற்கு குடி போய்விட்டேன் என்றால் சரிதான். அதே வருடம் 3ம் வாதிக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். அப்போது கட்டிடத்தின் தரை தளத்தில் மாணிக்கம் என்பவர் குடியிருந்தார் அவரை காலி செய்ய சொல்லிவிட்டு விஜயகுமார் அவர் மனைவியோடு வசித்து வந்தார் என்றால் சரிதான். 1998ல் இருந்து 2 ஆண்டுகளில் முதல் தளத்தின் கிழக்கு பகுதியை எனது தந்தை கட்டி முடித்துவிட்டார் என்றால் சரிதான். 4ம் வாதிக்கு 2001ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். அப்போது நான் தரை தளத்திற்கு மாணிக்கத்தை காலி செய்துவிட்டு குடிப்பெயர்ந்தேன். தரை தளத்தில் நான் காலி செய்து பிறகு 4ம் வாதியும் அவரது மனைவியும் அங்கு குடிவந்தார்கள் என்றால் சரிதான். ஏ அட்டவணை சொத்தின் பகுதிதான் பி அட்டவணை சொத்து என்றால் சரிதான். குடும்ப சூழ்நிலை மற்றும் முதல் தளத்தில் கட்டிடம் கட்டியதால் கூட்டுறவு சங்கத்தில் கடனை திரும்பி செலுத்த முடியாமல் போய்விட்டது என்றால் சரிதான். அதனால் சொத்து ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் தரை தளத்தில் 4ம் வாதியும் முதல் தளத்தில் நானும் 3ம் வாதியும் குடியிருந்தோம் என்றால் சரிதான்.

2) மொத்த சொத்தில் 3 ல் 2 பங்கு சொத்தை தனது சகோதரிகளிடம் இருந்து பாக விடுதலை பத்திரம் மூலம் எனது தந்தை வாங்கிவிட்டார் என்றால் சரிதான். அதனால் 3 ல் 2 பங்கு சொத்தை எனது தந்தையின் தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தந்தை கடன் வாங்கி வீடு கட்டினார். 3 ல் ஒரு பங்கு சொத்துதான் எனது தந்தையின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். அதை பொருத்துதான் பாகம் கேட்க முடியும் என்றால் சரிதான். 625 சதுர அடி மனை மற்றும் அதில் இருந்த கட்டிடத்தை கூட்டு குடும்ப சொத்தாக கருதலாம் என்று எனது தந்தை சொல்லிவிட்டார் என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்து என்பதால்தான் எனது தந்தை மற்றும் அவரது மகன்கள் பொன்னேரி கூட்டுறவு சங்கத்தில் அடமானம் வைத்தார்கள் என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்து என்பதால் தான் 3 மகன்களும் 3 வீடுகளை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். ஏலத்திலிருந்து சொத்தை மீட்க 3 பேரும் பேசி முடிவு செய்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது தந்தை பணி ஓய்வு பெற்றிருந்தார் என்றால் சரிதான். எனது தம்பிகள் தனியார் நிறுவனத்தில் வேலை செய்தார்கள் என்றால் சரிதான். நான் வேலை செய்த துறைமுக பொறுப்பு கழகத்தில் கடன் வாங்கலாம் என்று முடிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. கடன் கேட்ட போது தனிப்பட்ட உரிமை இருப்பதாக காட்டினால்தான் கடன் கொடுப்பதாக கூறினார்கள் என்றால் சரியல்ல. அந்த சமயம் எனது தந்தையும் சகோதரர்களும் 623 சதுர அடிக்கு என் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்ததததை வைத்துதான் நான் வேலை செய்த நிறுவனத்தில் கடன் கேட்டு விண்ணபித்தேன் என்றால் சரிதான். நான் எனது சகோதரர்களிடம் ஒப்புதல் பெற்று அந்த கடிதத்தை கொடுத்ததால்தான் கடன் கொடுத்தார்கள். கிரைய ஒப்பந்தத்தை அடுத்து எனது சகோதரர்கள் எனக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் எனது தந்தை எனது சதோரர்கள் சேர்ந்து நான் வேலை செய்த நிறுவனத்தில் இருந்து பெற்ற கடன் தொகையை கொண்டு பொன்னேரி கூட்டுறவு சங்கத்தில் பெற்ற கடனை அடைத்தோம் என்றால் சரிதான்.

**வழக்கறிஞரின் வேண்டுகோளின படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.